**வரையறுத்த தேசிய கடதாசி கம்பனி – 2016/2017**

-----------------------------------------------------------------------

வரையறுத்த தேசிய கடதாசி கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக ஒரு அபிப்பிராயத்தினை வெளியிடுவது எனது பொறுப்பாகும். என்னால் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) நேரொத்ததான இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நெறிமுறைகளின் தேவைப்பாடுகளுக்கு நான் இணங்கி நடக்கிறேன் என்பதற்கும் நிதிக்கூற்றுக்கள் போதியவில் பிழையான கூற்றுக்களிலிருந்து விடுபட்டது என்பது தொடர்பாகவும் நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ப்படுகின்றது என்பதனை இந்நியமம் எதிர்பார்க்கின்றது.

நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல் கணக்காய்வால் உள்ளடக்கப்படுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகளானது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான கூற்றிக்களிலிருந்தான ஆபத்துக்களை மதிப்பீடு செய்வதனையும் உள்ளடக்கிய கணக்காய்வாளரின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும். அந்த ஆபத்துக்களை மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான வகையில் கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்குரியதான உள்ளக கட்டுப்பாட்டினை கணக்காய்வாளர் கவனத்திற்கு எடுத்துக்கொள்கின்ற போதிலும் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக ஒரு அபிப்பிராயத்தினை வெளியிடுவதனை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை. முகாமைத்துவதினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்வதனை போல நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் தொடர்பாக மதிப்பீடு செய்வதும் கணக்காய்வில் உள்ளடக்கப்படவில்லை.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் என்னால் மறுப்பு அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினால் கணக்காய்வு அபிப்பிராயத்தினை வெளியிடுவதற்கு முடியுமான ஒரு அடிப்படையினை பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான, போதியளவான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களின் தனித்தனியாக அடையாளங்காணப்பட வேண்டியபோதிலும் கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களின் கிரயம் ரூபா 132,274,693 தனித்தனியாக அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் மோட்டார் வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் கிரயப் பெறுமதியை மிகைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக வருடாந்த நட்டம் ரூபா 532,634 மிகையாகக் காட்டப்பட்டிருந்தது

(ஆ) 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு கடம்பனியின் பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்த மீதிகளுடன் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியில் உள்ளவாறு பொதுப் பேரேட்டின் ஆரம்ப மீதிகளை ஒப்பீடு செய்த போது சொத்துக் கணக்குகளின் 136 மீதிகள் தொடர்பான ரூபா 3,887,304,944 தொகையும் பொறுப்புக் ககணக்குகளின் 218 மீதிகள் தொடர்பான ரூபா 3,770,750,351 தொயையும் உரிமை மூலதன கணக்குகளின் 03 மீதிகள் தொடர்பான ரூபா 442,884,051 தொகையும் ஆக ரூபா 8,100,939,346 தொகையான முழு வித்தியாசத்தினை கணக்காய்விற்கு விளக்கமளிப்பதற்கு முகாமைத்துவம் தவறி இருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

(அ) ரூபா 49,863,660 தொகையான 04 வருமானக் கணக்கு மீதிகளும் ரூபா 95,447,434 தொகையான 03 செலவுக் கணக்கு மீதிகளும் ரூபா 484,423,303 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள், ரூபா 121,020,606 பெறுமதியான இறுதி இருப்புக்கள், ரூபா 87,755,556 பெறுமதியான வணிக பெறவேண்டியவைகள், ரூபா 465,449,058 பெறுமதியான ஏனைய பெறவேண்டியவைகள், ரூபா 38,005,467 தொகையான காசும் காசுக்குச் சமமானவைகளும், ரூபா 160,140,052 தொகையான வட்டியுடனான கடன், ரூபா 134,645,393 தொகையான வணிக செலுத்த வேண்டியவைகள் மற்றும் ரூபா 1,387,796,113 பெறுமதியான ஏனைய செலுத்த வேண்டியவைகள் என்பனவாக மொத்தமாக ரூபா 3,024,546,642 தொகையான கொடுக்கல் வாங்கல் மற்றும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2016/2017 ஆண்டிற்காக தேசிய கடதாசி கம்பனியின் வங்கி மூலம் இடம்பெற்றுள்ள கொடுக்கல் வாங்கல்களை பரீட்சித்த போது இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 164807 தொடர்பாக இடம்பெற்ற ரூபா 3,932,433 மற்றும் ரூபா 6,600,000 பெறுமதியான கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளின் 35 கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் வேண்டப்பட்டிருந்த போதிலும் எந்த தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்கு இலக்கம் 2699996 தொடர்பான 36 கொடுக்கல் வாங்கல்களின் தகவல்கள் வேண்டப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 27 கொடுக்கல் வாங்கல்கள் தொாடர்பான காசோலைகளின் பிரதிகள் மாத்திரம் கணக்காய்விற்கு கிடைத்திருந்ததுடன் ரூபா 55,052,258 பெறுமதியான 09 கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அக்காசோலைகளுக்குரிய 16 நபர்களுக்கு ரூபா 11,342,643 தொகையான காசோலைகளும் தொழில் ஆணையாளருக்கு ரூபா 44,528,981 மொத்தப் பெறுமதியான 02 காசோலைகளும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 02 காசோலைகள் மூலம் ரூபா 19,084,250 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அக்காசோலைகளுக்குரிய கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் எந்த உறுதிப்படுத்தல் கடிதமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 46,888,937 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 71,610,232 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 118,499,169 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானங்கள், ரூபா 75,290,868 ஆல் குறைவடைதல் மற்றும் நிருவாகச் செலவுகள் ரூபா 72,100,692 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) 2007 இன் 07 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 148 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களை சரியாக அறிக்கையிடுகின்ற மற்றும் விளக்கமளிக்கின்ற கணக்கறிக்கைகளும் துணை ஆவணங்களும் வைத்திருக்க வேண்டிய போதிலும் கணக்கு காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் சம்பந்தமான கணக்கேடுகள் மற்றும் கணக்கீட்டு சான்றுகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக கம்பனியின் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 பெப்ரவரி 09 ஆந் திகதியில் உள்ளவாறு இலங்கை மின்சார சபைக்குச் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலுவையான மின்சாரப் பட்டியலிலான ரூபா 483,997,075 தொகையினை செலுத்தாமையால் அத்திகதியிலிருந்து வாழைச்சேனை தொழிற்சாலைக்கு மின்சாரத்தை வழங்குவது தற்காலிமாக துண்டிக்கப்பட்டதுடன் மின்சாரம் வழங்கப்படாமையால் 2020 யூன் மாதம் வரை வாழைச்சேனை தொழிற்சாலையில் எந்த உற்பத்திச் செயற்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2022 செப்தெம்பர் 08 ஆந் திகதி EP/EE(COM)CS/Bulk Supply ஆம் இலக்க மின்சார சபையின் பிரதான முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் மற்றும் 2020 மார்ச் 26 ஆந் திகதிய அமைப/20/0561/224/015 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ரூபா 361,992,685 தண்டனை வட்டியினை பதிவழித்ததன் பின்னர் மிகுதியான ரூபா 122,004,390 நிலுவையான மின்சாரப் பட்டியல் தொழில்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலப்பகுதி கடந்ததன் பின்னர் வருகின்ற ஆறு மாத காலப்பகுதிக்குள் தவணை அடிப்படையில் செலுத்தி முடிவுறுத்தும் நிபந்தனைக்கு உட்பட்டு செலுத்துவதற்கான அங்கீகாரத்தினைப் பெற்று 2020 யூலை மாதத்தின் போது தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க

2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கடதாசிக் கம்பனியின் நிலுவை மின்சாரப் பட்டியலான ரூபா 122,004,390 பெறுமதியில் ரூபா 10,000,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் இன்னும் ரூபா 112,004,390 பெறுமதி செலுத்த வேண்டியுள்ளது.

(இ) 2020 யூலை மாதத்திலிருந்து கம்பனியின் தலைமை அலுவலகத்தில் நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 09 ஊழியர்களும், ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 12 ஊழியர்களும் மற்றும் நாளாந்த சம்பள அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 02 ஊழியர்களுமாக 23 ஊழியர்களும் வாழைச்சேனை தொழிற்சாலையில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 06 ஊழியர்களும் மற்றும் நாளாந்த சம்பள அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பப்பட்ட 120 ஊழியர்களுமாக 126 ஊழியர்கள் உள்ளடங்கலாக மொத்த ஊழியிர்களின் எண்ணிக்கை 149 ஆக இருந்ததுடன் இந்த ஆளணியினர்களுக்காக இதுவரை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் போது திறைசேரியின் உத்தரவாதத்துடன் (Treasury guarantee) 2020 திசெம்பர் 09 ஆம் திகதி ரூபா 40 மில்லியன் கடன் 06 மாத நிவாரண காலத்திற்கு உட்பட்டு 05 ஆண்டுகள் காலத்தின் போது 54 தவணைகளில் செலுத்தும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் கம்பனியால் 2021 மே மாதம் 17 ஆந் திகதி மீண்டும் ஒரு தடவை ரூபா 100 மில்லியன் கடன் வாழைச்சேனை தொழிற்சாலையின் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக 05 ஆண்டுகள் காலத்திற்குள் செலுத்துவதற்கு உட்பட்டு மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இக்கடன் பணமானது பொதுத்திறைசேரியின் உத்தரவாதத்துடன் சந்தை வட்டி வீதத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் வரிசை அமைச்சாகிய கைத்தொழில் அமைச்சிடமிருந்து எந்த அனுசரணையும் தேசிய கடதாசிக் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு கடதாசி உற்பத்தி இயந்திரம் (Peper Machine) மற்றும் போட் தயாரிப்பு இயந்திரம் (Board Machine) ஆக 02 பிரதான இயந்திரங்கள் காணப்பட்டிருந்தும் நிகழ்காலத்தில் போட் தயாரிக்கும் இயந்திரம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் மீண்டும் வாழைச்சேனை கடதாசி தொழிசாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது போட் தயாரிக்கப்படும் இயந்திரம் செயற்படாத மற்றும் இயந்திர கோளாறுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் முறையான செயற்பாட்டிற்காக கடதாசி இயந்திரத்தின் பாகங்கள் கழற்றப்பட்டு போட் தயாரிக்கும் இயந்திரத்திற்குப் பொருத்துதலானது கம்பனி பின்பற்றுகின்ற நடைமுறையாகும். இவ்வாறு கடதாசி தயாரிக்கும் இயந்திரத்தின் 08 பிரதான விடயங்கள் போட் தயாரிக்கும் இயந்திரத்திற்கு பொருத்தப்பட்டுள்ளதுடன் அதனுள் பெறுமதி ரூபா 34,433,059 ஆகும். அதற்கிணங்க கணக்காய்வுத் திகதியான 2024 சனவரி 22 ஆந் திகதி கடதாசி தயாரிக்கும் இயந்திரம் எந்த பயன்பாட்டிற்குப் எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் செயற்பாடற்று காணப்பட்டதனால் காட்போட் தயாரித்தல் தடைப்பட்டிருந்தது.

(ஊ) 2011 திசெம்பர் 19 ஆந் திகதிய 1037 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் எம்பிலிபிடிய தொழிற்சாலையினை மீண்டும் மீட்டெடுத்தல் நிலைக்கு மாற்றுவதற்கும் மீண்டும் அபிவிருத்தி செய்வதற்குமாக ரூபா 600 மில்லியன் தொகையான மறுசீரமைப்பிற்கு 30 ஆண்டுள் காலத்திற்கு 561/3 ஆம் இலக்க எல்விடிகல மாவத்தை கொழும்பு 05 இல் அமைந்துள்ள அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கம்பனி மற்றும் வரையறுத்த தேசிய கடதாசி கம்பனி ஆகிய நிறுவன சோடிகளுக்கும் 03/43 ஆம் இலக்கம், வென்டனோர் எவனியு, மேற்கு பேரித் மேற்கு ஒஸ்ட்ரேலியா வியாபார விலாசத்திலுள்ள வரையறுத்த பொறியியல் மற்றும் பராமரிப்பு (தனியார்) கம்பனிக்குமிடையேயான உடன்படிக்கைகளின் பிரகாரம் இணங்கிகொண்ட ரூபா 600 மில்லியன் தொகையான மீட்புக்களில் ரூபா 200 மில்லியன் குத்தகைதாரரினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய கம்பனியால் சிறிய அளவு காலம் உற்பத்தி நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் எம்பிலிபிடிய தொழிற்சாலையின் கடதாசி உற்பத்தி இயந்திரம் செலான் வங்கிக்கு ரூபா 418,483,037 பெறுமதிக்கு அடமானம் வைத்து 2012 ஆம் ஆண்டின் போது தொழிற்சாலையினை விட்டுச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த அடமானத்தினை தீர்த்துவைப்பதற்கு இரண்டாவது குத்தகைதாரரினால் ரூபா 120 மில்லியன் பணத்தை வங்கிக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் உரிய முறைப்படி குத்தகை தவணைப் பணத்தை செலுத்தாததன் அடிப்படையில் அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் உரிய குத்தகை உடன்படிக்கை 2014 செப்தெம்பர் 25 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தும் 2011 திசெம்பர் 19 ஆந் திகதியிலிருந்து உடன்படிக்கையை இரத்துச் செய்த காலமான 2014 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையான மூன்று ஆண்டுகள் காலத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 42 மில்லியன் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உற்பத்தி இயந்திரங்களை செலான் வங்கிக்கு அடமானம் வைப்பதற்காக தேசிய கடதாசி கம்பனி பிரதிநிதித்துவம் செய்கின்ற வகையில் உடன்படிக்கை மேற்கொண்ட அந்த பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரர்களிடமிருந்து கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கையினை மேற்கொண்ட வரையறுத்த பதர் பொறியியல் மற்றும் பராமரிப்பு (தனியார்) கம்பனி உற்பத்தி நடவடிக்கையை நிறுத்தியதன் காரணமாக உடன்படிக்கையை மீறுதல் தொடர்பாக குத்தகைக்கு வழங்கிய தரப்பினர்களால் எந்த சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தேசிய கடதாசி கம்பனியின் எம்பிலிபிடிய தொழிற்சாலை 2022 மார்ச் 09 ஆந் திகதிய குத்தகை உடன்படிக்கையின் கீழ் கேஎஸ்பீஏ எம்பிலிபிடிய கடதாசி தொழிற்சாலை (தனியார்) கம்பனிக்கு (KSPA Ambilipitiya Paper Mills Private Limited) ரூபா 260 மில்லியன் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 30 ஆண்டுகள் காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 18 மாதங்களுக்குள் உற்பத்தி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் அக்காலப்பகுதியின் போது ரூபா 13,000,000 வருடாந்த குத்தகை தவணைப் பணம் குத்தகைதாரரினால் கம்பனிக்கு செலுத்துதல் வேண்டும். உற்பத்தி உடன்படிக்கையின் பிரகாரம் விற்பனை வருமானத்தின் மீது 3% இற்குச் சமமான பெறுமதியினை குத்தகை தவணைப் பணமாக செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் உரிய கம்பனியால் இதுவரை உற்பத்தி நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வரையறுத்த தேசிய கடதாசி கம்பனியின் 2016/2017 கணக்காண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 2023 பெப்ரவரி 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

மீளாய்வாண்டிற்கான ஆண்டறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.